IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE NO.I, HOSUR

**OS NO. 246/2008**

Deposition witness for Plaintiffs/Defendant/Respondent

Solemnly affirmed and sworns by Selvi. Choodamani Grade III Bench Clerk on

29.06.2022 accordance with the provisions with the Act of 1873.

Name : கிருஷ்ணப்பா Father's Name : அன்னையா

Village : Taluk :

Caste : Calling :

Religion: Age :

வா.சா. 1

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :

இவ்வழக்குப்பட்டிகை சொத்தில் பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு பட்டிகை சொத்து கூட்டு அவகாசத்தில் உள்ள காரணத்தினால் பாகம் கோரி தாக்கல் செய்கிறேன். இவ்வழக்கானது பாகம் கோரி தாக்கல் செய்யவில்லை என்றாலும் வழக்கு பட்டிகை சொத்தில் எனக்குரிய உரிமை கோரி விளம்புகை மற்றும் உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டுமே கேட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் அதைப்பற்றி எனக்கு சரியாக தெரியாது. வழக்கு பட்டிகை சொத்து எல்லப்பா மற்றும் அன்னைய்யா ஆகியோரின் பெயரில் கூட்டுப்பட்டாவாக உள்ளது ஆகவே இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன். என்னுடைய வாதுரையில் வழக்கு பட்டிகை சொத்தானது ஆதியில் வெங்கடரமணப்பாவிற்கு உரிமை கிடையாது என்றும் முனிவெங்கடப்பாவிற்குதான் பாத்தியம் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். வெங்கடப்பாவும் வெங்கடரமணப்பாவும் சகோதரர்கள் என்றால் சரிதான். வெங்கடப்பாவிற்கு மகன்கள் கிடையாது என்றால் சரிதான், அவருக்கு 2 மகள்கள் மட்டுமே உள்ளனர். அதில் ஒருவர் பெயர் எல்லோஜியம்மா என்றாலும் மற்றொருவர் பெயர் முனியம்மா என்றாலும் சரிதான். எல்லோஜியம்மா எல்லப்பாவை திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான். முனியம்மாவிற்கு குழந்தைகள் கிடையாது என்றால் சரிதான். எல்லப்பாவிற்கு 2 மனைவிகள் என்றால் சரிதான். அதில் மூத்த மனைவியின் பெயர் எல்லம்மா என்றாலும் 2 வது மனைவியின் பெயர் எல்லோஜியம்மா

என்றாலும் அதைப்பற்றி எனக்கு தெரியாது. மூத்த மனைவி எல்லம்மாவிற்கு ஒரு மகன் அவர் பெயர் வெங்கடரமணப்பா என்றாலும் ஒரு மகள் அவர் பெயர் போடம்மா என்றாலும் சரிதான். எல்லோஜியம்மாவிற்கு முனிவெங்கடப்பா மற்றும் குள்ளப்பா என்று 2 ஆண் வாரிசுகள் உள்ளனர் என்றால் சரிதான். மேற்குறிப்பிட்ட வெங்கடரமணப்பா, முனிவெங்கடப்பா0 மற்றும் குள்ளப்பா ஆகியோருக்கு இடையே வாய்மொழி பாகப்பிரிவினை ஏற்படுத்தப்பட்டது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. 80 வருடங்களுக்கு முன்பு வெங்கடரமணப்பா மற்றும் வெங்கடப்பா ஆகியோருக்கு இடையே வாய்மொழி பாகப்பிரிவினை ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். புல எண் 10/1 ல் 1 ஏக்கர் 1 சென்ட் விஸ்தீர்ணம் கொண்ட நிலம் உள்ளது என்றால் சரிதான். மேலும் வழக்கு பட்டிகை 2 ம் வரிசை எண் சொத்தில் 50 சென்ட் நிலம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி வாய்மொழி பாகப்பிரிவினையின் அடிப்படையில் இவ்வழக்கு பட்டிகை சொத்துகள் உள்ள புல எண் 10/1 மற்றும் 78/10 ஆகிய சொத்துக்கள் வெங்கடப்பாவிற்கு பாகமாக வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. முனிவெங்கடப்பாவிற்கு 6 வாரிசுகள் உள்ளனர். அவர்கள் ஆஞ்சப்பா, ஸ்ரீராமுடு, ராஜப்பா, காந்தப்பா, கோபம்மா மற்றும் பத்மா ஆவர் என்றால் சரிதான். வெங்கடரமணப்பா, முனிவெங்கடப்பா மற்றும் குள்ளப்பா ஆகியோருக்கிடையே பல வருடங்களுடக்கு முன்பே வாய்மொழி பாகப்பிரிவினை ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். அதில் இவ்வழக்கு பட்டிகை சொத்துகள் வெங்கடரமணப்பாவிற்குதான் பாகமாக கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்துக்கள் முனிவெங்கடப்பாவிற்குதான் பாகமாக கொடுக்கப்பட்டது. ஆஞ்சப்பா, ஸ்ரீராமுடு, ராஜப்பா, மற்றும் முனிவெங்கடம்மா ஆகியோருக்கிடையே 2003 ம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை ஆவணத்தின்மூலம் பாகப்பிரிவினை ஏற்படுத்தப்பட்டது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. மேற்படி பதிவு செய்யப்பட்ட பாக பத்திரத்தில் புல எண் 10/1 ல் 51 சென்ட் நிலமானது 9 ம் பிரதிவாதி ஸ்ரீராமுலுவிற்கு பாகமாக கொடுக்கப்பட்டது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. புல எண் 10/1 ல் மீதமுள்ள 50 சென்ட் நிலமானது இவ்வழக்கின் 5 ம் பிரதிவாதி ராஜப்பாவிற்கு பாகமாக கொடுக்கப்பட்டது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. மேற்படி 2 பதிவு செய்யப்பட்ட பாகப்பத்திரங்களும் வாதி தரப்பு சான்று ஆவணம் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனக்கு மேற்படி பதிவு செய்யப்பட்ட பாகப்பத்திரங்கள் குறித்து தெரியாது என்று இவ்வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கு 5 ம் பிரதிவாதி ராஜப்பா வாரிசுகள் புல எண் 10/1 ல் 51 சென்ட் நிலத்தினை 25.08.2004 தேதியன்று இவ்வழக்கு 3 ம் பிரதிவாதி கோபால ரெட்டியின் பெயருக்கு கிரயம் கொடுத்துள்ளனர் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. மேற்படி கிரய ஆவணம் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது

என்றால் சரிதான். அதன்பின்பு 3 ம் பிரதிவாதி கோபால ரெட்டி புல எண் 10/1 ல் 51 செண்ட் நிலத்தினை 01.11.2004 தேதியன்று இவ்வழக்கின் 2 ம் பிரதிவாதி முனியப்பாவின் பெயருக்கு கிரயம் எழுதிக்கொடுத்தார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. மேற்படி கிரய ஆவணம் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். தொடர்ச்சியாக இவ்வழக்கு 9 ம் பிரதிவாதி ஸ்ரீராமுலுவின் வாரிசுகள், அவரின் சகோதரிகள், முனியப்பா மற்றும் பகர அதிகாரம் பெற்ற கிருஷ்ணப்பா, புல எண். 10/1 ல் உள்ள 1 ஏக்கர் 1 செண்ட் விஸ்தீர்ணம் கொண்ட 1 ம் பிரதிவாதி நஞ்சப்பாவின் பெயருக்கு 23.06.2007 தேதியிட்ட கிரய ஆவணத்தின் அடிப்படையில் கொடுத்துள்ளனர் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. மேற்படி கிரய ஆவணம் வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 23.06.2007 ம் தேதியிலிருந்து மேற்படி சொத்தில் நஞ்சப்பாதான் கைவச அனுபவத்தில் இருந்து வருகிறார் என்றால் சரியல்ல. புல எண் 10/1 உள்ள சொத்திற்கான பட்டா 1 ம் பிரதிவாதி நஞ்சப்பாவின் பெயரில் உள்ளது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. 04.08.2008 தேதியிட்ட புல எண் 10/1 ல் 1 ஏக்கர் 1 செண்ட் நிலத்தினை 1 ம் பிரதிவாதி நஞ்சப்பா 18 ம் பிரதிவாதிக்கு கிரயம் கொடுத்தார் என்றால் சரிதான். புல எண் 10/1 ல் 1 ஏக்கர் 1 செண்ட் நிலமானது தற்பொழுதுவரை 18 ம் பிரதிவாதி கிருஷ்ணப்பாவின் கைவசத்தில் உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி சொத்திற்குரிய அனைத்து வருவாய் ஆவணங்கள், பட்டா, சிட்டா, அடங்கல் ஆகியவை 18 ம் பிரதிவாதியின் பெயரில்தான் பெயர் மாற்றம் செய்யப்பட்டு தற்பொழுதுவரை உள்ளது என்றால் சரியல்ல.

**வேண்டுகோளுககிற்கிணங்க பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

ஒம்/-வ.அகவிதன்,
**நீதித்துறை நடுவர் எண். 1**
**ஒசூர் கிருஷ்ணகிரி மாவட்டம்.**